**ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் வருமான செலவினக் கணக்கு மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய சம்பள கட்டளைச் சட்டத்தின் 5 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் 6(1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் தவிர 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- நிதியம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தினால் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதப்பதாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் அதற்கு முரணாக 3 உப ஆசரியர் பாடசாலைகளுக்கு உரியாக 1988 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,631,064 தொகையான பங்களிப்புத் தொகை வருமானச் செலவினக் கணக்கில் பங்களிப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. மேலும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக 2021 ஆம் ஆண்டின் போது உப | சம்பள கொடுப்பனிவிக் போது ஏற்படும் தவறுகள் சீராக்கம் செய்யப்பட்டு நிலுவை விதவைகள், அநாதைகள் ஒகை பின்னர் அனுப்பி வைக்கப்படுகின்றது. அப்பெறுமதிகள் தொடர்பாக சரியான தெளிவொன்று எமது திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு காணப்படவில்லை. அதனால் நிலவும் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் வைக்கப்பட வேண்டும். |

ஆசிரியர் பாடசாலைகளிலிருந்து கிடைத்திருந்த ரூபா 1,552,883 தொகை மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக மேலும் கிடைக்க வேண்டியப ங்களிப்புத் ொகை ரூபா 182,790 என மொத்தம் ரூபா 1,735,673 ஆன கிடைக்க வேண்டியப ங்களிப்புத் தொகையாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டம் | | | |
| (அ) கட்டளை இலக்கம் 9(அ) | ஒவ்வொரு உதவித்தொகை கொடுப்பனவிற்கு தகைமை பெற்ற மற்றும் பணம் செலுத்துவொர் தொடர்பான தொடர்பான தகவல்களினை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | தரவு முறையொன்றினை வடிவமைத்து மேம் படுத்துவதற்காக பிரிவெனாக் களுக்கும் பாடசாலைகளின் ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் அத்தியவசியமானது . | பங்களிப்புத் தொகை செலுத்துவோர் தொடர்பாக முறையான முறையான தகவல் முறைமை யொன்றை பேணுவது முகாமையின் பொறுப்பாகும். |
| (ஆ) கட்டளை இலக்கம் 04 | ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் பங்களிப்புக்களிலிருந்து நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியதுடன் அதன்மூலம் ஆசிரியர்களின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், பங்களிப்புக்களின் சேகரிப்பு மற்றும் செலுத்துகைகளினை மேற்கொள்வதற்காக நிதியத்தின் சார்பில் தனியானதொரு வங்கிக் கணக்கொன்று பேணப்படாமல் இருந்ததுடன், பங்களிப்புக்கள் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் வங்கிக் கணக்கிற்கு | இந்நிதியத்திற்காக புறம்பான வங்கிக் கணக்கெனான்று பேணிச்செல்லப்படாமல் உள்ளதுடன் பெறுவனவுகள் கொடுப்பனவுகள் பதிவுசெய்வதற்கு காசேடு பயன் படுத்தப்படுகின்றது. | சட்டத்தின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சேகரிக்கப்பட்டிருந்தமை மற்றும் ஓய்வூதியங்கள் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் குறித்த செலவினங்கள் செலுத்தப்பட்டிருந்தது

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 324,414,589 மிகையாக இருந்ததுடன் அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 224,019,899 ஆக இருந்தமையால் முன்டனைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 100,394,690 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் பங்களிப்புக்களின் பெறுவனவு ரூபா 130,567,450 ஆல் அதிகரித்தமை, மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | உதவிப் பாடசாலைகள், நிதியத்திற்கு அங்கத்துவத்தை பெற்றுக் கொள்வது தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது விதவைகள் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை வழங்கப்பட்டிருந்த போதும் அந்த உறுப்பினர்களுக்காக பங்களிப்பு உறுப்பினர் இலக்கம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உறுப்பினர் இலக்கம் வழங்குதல் தொடர்பாக பங்களிப்புத் தொகை இலக்கம் செயற்படாததுடன் அது குறித்த உத்தியோகத்தரினதும் சேவை புரியும் நிறுவனத்தின் பொறுப்பாகும். | நிதியத்தின் உறுப்பினர்களுக்கு உறுப்பினர் இலக்கம் பெறுவது தொடர்பாக பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பங்களிப்புக்கள் பெறுகை விபரங்கள் உள்ளிட்ட அங்கத்துவம் தொடர்பாக தரவு முறையொன்று நிதியத்திடம் இல்லாமை காரணமாக பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்தும் போது பங்களிப்பாளரிடம் அறவிடப்பட்ட பண அளவு வரலாற்றுத் தாள் பரீட்சிப்பதன் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்ட போதும் அந்தப் பணம் நிதியத்திற்கு துல்லியமாகப் பெறப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | விதவைகள் மற்றும் அநாதைகளின் பங்களிப்புக்கள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தாபனத்தின் தலைவரினூடாக சான்றுப்படுத்திய பின்னர், வரலாற்றுத் தாளுடன் ஒப்பிடுவதன் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | பங்களிப்புக்கள் நிதியத்திற்கு சரியாக பெறப்பட்டிருந்தனவா என்பதை ஓய்வூதிய திணைக்களத்தினூடாக உறுதிப்படுத்தும் முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |